கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:16.07.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2024 –2025

### பொதுப்பிரிவினருக்கான இரண்டாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு

**(Academic Stream – Second Phase Certificate Verification)**

இந்த கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் (TNAU), தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கும் (TNJFU) மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் (வேளாண்மைப் பிரிவு, (AU)) ஒரே விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீற்கும் (Academic Stream) மற்றும் 7.5% இடஒதுக்கீற்கும் இணையதளவழி கலந்தாய்வு 23.06.2024 முதல் 26.06.2024 வரை நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நகர்வு முறையில் ஏற்பட்ட காலியிடங்களுக்கு இரண்டாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு **16.07.2024** மற்றும் **17.07.2024** ஆகிய இரண்டு நாட்கள் மொத்தம் 2149 இடங்களுக்கு நடைபெறுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு தற்காலிக சேர்க்கை அவர்கள் பெற்ற தரவரிசை மதிப்பெண், விருப்பப்பாடம் மற்றும் சாதிய அடிப்படையில் வழங்கப்பட்டன.

அவ்வாறு, தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட மாணவ/ மாணவியர், தங்களின் அசல் சான்றிதழ்களான (10–ம் மற்றும் 12 –ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ் (Community Certificate) மற்றும் மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) உடன் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள அண்ணா அரங்கத்தில் **16.07.2024** மற்றும் **17.07.2024** ஆகிய

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டு தங்களின் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

இத்தகவல்கள் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட மாணவ/ மாணவியர்களுக்கு அவர்கள் பதிவு செய்த மின்னஞ்சல் (email) முகவரிக்கும் மற்றும் அலைபேசி எண்ணிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாணவ/ மாணவியர்களின் பட்டியல் https://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் (email) மூலமாகவும் 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***